இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 6.10.2026

தூய சக்தியின் துர்நாற்றம்!

தூய சக்தியாக தன்னைச் சொல்லி வந்த விஜய் கட்சியின் துர்நாற்றங்கள் இடைத்தேர்தல் நடக்கும் தாராபுரம், மதுராந்தகம் ஆகிய இரண்டு தொகுதியிலும் அதிகமாக அடிக்கிறது.

இந்த ஆட்சியை வெளியில் இருந்து ஆதரிக்கும் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளாலேயே இதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், "த.வெ.க.வுக்கு ஆதரவாகக் களம் இல்லை. எனவே, தூயசக்தி என கூறிக் கொண்டு வாக்காளர்களுக்குப் பணம் தருகிறது; த.வெ.க. தூயசக்தி என கூறிக்கொள்ளும் விஜய், நேர் எதிராகச் செயல்படுகிறார். ஆதரவு இல்லை என்பது தெரிந்ததால் முதல்வர் தெருத்தெருவாகச் செல்கிறார்" என்று சொல்லி இருக்கிறார்.

புதுச்சேரியில் செய்தியாளர்களைச் சந்தித்த பெ.சண்முகம், "தோல்வி பயத்தில் தயக்கம் இன்றி த.வெ.க. கட்சி இரண்டு தொகுதிகளிலும் பணத்தை அள்ளி வீசுகிறது" என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டி இருக்கிறார்.

மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் வாக்காளர்களுக்கு த.வெ.க.வினர் பணப்பட்டுவாடா செய்து வருவதாகவும், இதுகுறித்து தேர்தல் ஆணையத்தில் புகார் அளிக்க இருப்பதாகவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் தெரிவித்துள்ளார்.

இதே கருத்தை இன்னும் கூடுதல் ஆதாரங்களுடன் வெளிப்படுத்தி இருக்கிறார் இந்தியக் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் வீரபாண்டியன். தாராபுரம் இடைத்தேர்தலில் கூகுள் பே போன்ற யு.பி.ஐ. செயலிகள் மூலம் வாக்காளர்களுக்கு த.வெ.க.வினர் பணம் கொடுப்பதாக அவர் சொல்லி இருக்கிறார்.

தாராபுரத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த வீரபாண்டியன், "தாராபுரத்தில் த.வெ.க.வினர் வாக்காளர்களுக்கு கூகுள் பே மூலம் பணம் வழங்கி வருகின்றனர். கிராமங்களில் அனைத்து அமைச்சர்களும் முகாமிட்டுள்ளனர். பேரவைப் பொதுத் தேர்தலில் அதிக அளவில் தொகுதிக்குச் செல்லாத த.வெ.க.வினர் தற்போது இடைத்தேர்தல் நடக்கும் இரண்டு தொகுதிகளுக்கும் அதிக நேரம் செலவிடுகின்றனர். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டால் வங்கிக் கணக்கில் இருந்து அதிக அளவில் பணம் எடுக்க முடியாது. ஆனால் தற்போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்களில் பணம் கோடிக்கணக்கில் புழங்குகிறது. தேர்தல் ஆணையம் தூங்குகிறது. எப்படி இவ்வளவு பணம் பதுக்கப்பட்டுள்ளது" என்று சொல்லி இருக்கிறார்.

"தனித்தனி நபர்களுக்குப் பணப்பட்டுவாடா செய்வதைத் தான் பார்த்திருக்கிறோம். ஒட்டுமொத்த தெருவையே விலை பேசுவதை இந்தத் தேர்தலில் பார்க்கிறோம். அமைச்சர்கள் பலர் இதில் இறங்கி இருப்பதாகச் செய்திகள் வருகிறது. ஒவ்வொரு வோட்டுக்கும் ரூ.5 ஆயிரம், ரூ.10 ஆயிரம் கொடுக்கிறார்கள். இதற்கெல்லாம் ஆதாரம் இல்லை என்று நினைக்கிறார்களா? போன் பே, கூகுள் பே மூலம் எல்லாம் நடக்கிறது" என்றும் வீரபாண்டியன் சொல்லி இருக்கிறார்.

தாராபுரத்தில் வாக்காளர்களுக்கு த.வெ.க. சார்பில் டிபன் பாக்ஸ் தரப்பட்டுள்ளது. அதற்குள் பணம் வைக்கப்பட்டுள்ளது. இவை வீடியோ ஆதாரத்துடன் தேர்தல் அதிகாரிகளிடம் புகாராகத் தரப்பட்டுள்ளது. பறக்கும் படைக்குச் சொன்னாலும் அவர்கள் இதைப் பிடிப்பது இல்லை. தேர்தல் அதிகாரிகளும், காவல் துறையும் இதை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிறது.

இதைத் தான் தூய சக்தி என்கிறாரா விஜய். 'தேர்தலில் வாக்காளர்களுக்குப் பணம் கொடுப்பதை ஒழித்திருக்கிறோம்' என்று சொல்லித் திரிகிறார் விஜய். ஏழைகளை நிறுத்தினோம் என்றும் சொல்லித் திரிகிறார் விஜய். இரண்டுமே பொய்.

த.வெ.க. சார்பில் அதிகப்படியான கோடீஸ்வரர்கள் நிறுத்தப் பட்டார்கள். பெரும்பாலும் பணம் படைத்தவர்களுக்கே தொகுதிகள் ஒதுக்கப்பட்டது. மாற்றுக் கட்சியில் இருந்து வந்த, பணம் படைத்தவர்களுக்கே தொகுதிகள் ஒதுக்கப்பட்டது. அவர்கள் கோடிக்கணக்கில் செலவு செய்தார்கள் என்பதே உண்மை.

அதே போல் பல்வேறு தொகுதிகளில் வாக்காளர்களுக்கு த.வெ.க. வேட்பாளர்கள் பணம் கொடுத்தார்கள். 'சேலம் வேட்பாளர் 2 ஆயிரம் கொடுத்தார். அதனால் தான் அவர் வெற்றி பெற்றார். நான் பணம் கொடுக்காமல் விட்டுவிட்டேன்' என்று ஓமலூர் தொகுதியில் நின்று தோற்ற த.வெ.க. வேட்பாளர் சொன்னார். இதுதான் உண்மை ஆகும்.

கோடீஸ்வரர்களை நிறுத்தி, அவர்களையும் அதிகம் பணம் செலவு செய்ய வைத்துத்தான் பொதுத்தேர்தலில் அதிகப்படியான இடங்களை விஜய் கட்சி கைப்பற்றியது. அதே வழியைத் தான் இடைத்தேர்தலில் பின்பற்றுகிறார் விஜய்.

குதிரை பேரம் நடத்துவதில் விஜய் தேர்ந்தவர் என்பதைப் பார்த்தோம். எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்குவதிலும் அவர் சாமர்த்தியசாலி என்பதையும் பார்த்தோம். இடைத்தேர்தல் களத்தில் வாக்குகளை விலை பேசுவதிலும் கூச்சப்பட மாட்டார் என்பதையும் பார்த்து வருகிறோம்.

அரசு வழக்கறிஞர் பதவிக்கு சொந்தக் கட்சி வழக்கறிஞர்களிடமே லட்சக் கணக்கில் பண வசூல் நடந்துள்ளது. த.வெ.க.வைச் சேர்ந்த பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண் வழக்கறிஞர் இது தொடர்பாக உயர்நீதிமன்றத்திலேயே வழக்குப் போட்டார். இந்த தூயசக்தி என்ன செய்தார் தெரியுமா?

அவரைக் கட்சியை விட்டு நீக்கிவிட்டார். கன்னியாகுமரி மாவட்ட நீதி மன்றத்துக்கு அரசு வழக்கறிஞர் நியமனத்தில் பணம் விளையாடியதாக சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை குற்றம் சாட்டி உள்ளது. இதனை லஞ்ச ஒழிப்புத் துறை விசாரிக்க உத்தரவிட்டுள்ளது. 'லஞ்சம் கொடுத்து அரசு வழக்கறிஞர்கள் வர வேண்டுமா? அவர்கள் நாட்டை காப்பாற்றுவார்களா? அல்லது சட்டத்தைப் பாதுகாப்பார்களா?' என்று உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பி இருப்பது விஜய்யைப் பார்த்துத்தான்.

தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் அறையை சீரமைக்க டெண்டர் விடுவதற்கு முன்னதாக ஒரு நிறுவனம் பணியைத் தொடங்கி விட்டது. தாய் மாமன் தங்க மோதிர திட்டத்தில் முறைகேடு எனச் சொல்லப்படும் புகாருக்கு இதுவரை அதிகாரப்பூர்வமான பதில் இல்லை.

பழனிகோவில் இடத்தையே மொட்டை போடத் துணை போனதுதான் தூயசக்தியின் ஆட்சியா? தனியார் பேருந்துக் கட்டணங்கள் இஷ்டத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது. தனியார் பால் விலை உயர்ந்துள்ளது. அரசு ஆவின் பால் பற்றாக்குறை என்று திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது. சென்னை விமான நிலையத்தை தனியாருக்குத் தாரை வார்க்கத் துடிப்பது யாருடைய லாபத்துக்காக? பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை ரத்து செய்யத் தூண்டியவர்கள் யார்? மதுபானம், கனிம வளம் ஆகிய இரண்டு துறைகளிலும் என்ன நடக்கிறது? நடக்கப் போகிறது?

தூய சக்தியின் துர்நாற்றம் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது.

●●

துவரம் பருப்பு கொள்முதலில் கழக அரசின் மீது தவறான குற்றச்சாட்டு:

த.வெ.க. ஆட்சியில் பாமாயில் கொள்முதலில் ரூ.600 கோடி ஊழல்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக்.6-

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:

கழக ஆட்சியில் கிலோ ரூ.109 கொள்முதல் செய்யப்பட்ட துவரம் பருப்பை இந்தக் கோமாளி அரசு, ரூ.77.89க்கு வாங்கியுள்ளதாகவும், இதனால் இந்த ஆட்சியில் கொள் முதல் விலை ரூ.31 வரை குறைந்து, அரசுக்கு 750 கோடி மிச்சமாகும் என்றும், அரைகுறையாகவும் உண்மைகளை மறைத்தும் வெளி யிடப்பட்டுள்ள ஓர் செய்தியை ஆளுங் கட்சியின் Toolkits பரப்பிக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய விலைக் குறைப்புக்குக் காரணம், இந்த Circus சர்க்கார் அல்ல கழக அரசு தான் என்பதே நிதர்சனமான உண்மை.

2024 நவம்பரில் ரூ.112.69 ஆக இருந்த துவரம் பருப்பின் கொள்முதல் விலையை, படிப்படி யாக கடந்த பிப்ரவரி மாதம் ரூ.77.99 ஆகக் குறைத்தது கழக அரசு.

இந்த உண்மைகளை மறைத்து விட்டு, இந்த ஆட்சியில் தான்



குறைந்த விலைக்கு துவரம் பருப்பு கொள்முதல் செய்யப்பட்டது என்று கழகத்தின் மீது அவதூறு பரப்பு வதை ஏற்க முடியாது.

அதுமட்டுமல்ல, ரேஷன் கடைக ளில் வழங்கப்படும் பாமாயில், கழக ஆட்சியில் சென்றாண்டு செப்டம்ப ரில் லிட்டர் ரூ.124.90 க்கும், டிசம்ப ரில் ரூ.121.95 க்கும், கடந்த மார்ச் மாதத்தில் ரூ.136.95க்கும் கொள் முதல் செய்யப்பட்டது.

ஆனால், இந்த Circus ஆட்சியில் கடந்த ஜூன் மாதத்தில் ரூ.154.99 க்கும், தற்போது ரூ.148க்கும் அதிக விலை கொடுத்து கொள்முதல் செய் துள்ளனர்.

கழக ஆட்சியில் குறைந்த விலை யில் கொள்முதல் செய்யப்பட்ட பாமாயிலை, கடந்த 3 மாதங்களில், லிட்டருக்கு ரூ.11 அதிகம் கொடுத்து இந்த ஆட்சியில் வாங்குகிறார்கள் என்றால், சுமார் ரூ.600 கோடிக்கு மேல் ஊழல் நடந்து இருக்கிறது என்று தானே அர்த்தம்.

Abusive Warriors தான் உண்மை யிடம் இருந்து தூரத்தில் நிற்கிறார்கள் என்றால், இந்த ஆட்சியில் சில ஊடகங்களும் Fanboy type Sofa Ecosystemல் சிக்கி நிற்பது ஏன்?

அவதூறு பரப்புவதை நிறுத்தி விட்டு, விலைவாசி உயர்வால் அன்றாடம் அல்லல்படும் மக்களின் துயர் துடைக்க இந்த ஆட்சியாளர்கள் முன் வர வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

தலைமைத் தேர்தல் ஆணையர்

ஞானேஷ்குமாருக்கு எதிராக லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை!

கேரள அரசு உத்தரவு!

திருவனந்தபுரம், அக்.6 -

தலைமை தேர்தல் ஆணை யர் ஞானேஷ் குமாருக்கு எதி ராக லஞ்ச ஒழிப்புத்துறை விசா ரணைக்கு கேரள உள்துறை அமைச்சகம் உத்தரவிட் டுள்ளது.

தலைமை தேர்தல் ஆணை யரான ஞானேஷ் குமார், 2006ஆம் ஆண்டு கேரள பொதுப்பணித்துறை செயலாள ராக இருந்தார். அப்போது அவர் மீது தொடுக்கப்பட்ட புகார் தொடர்பான விசாரணைக்கு தற்போது உத்தரவிடப்பட்டுள் ளது.

கே.பி.சி.சி. செயற்குழு உறுப்பினர் வேணுகோபால் அளித்த புகாரின் அடிப்படை யில் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக கேரள உள்துறை அமைச்சர் ரமேஷ் சென்னித் தலா அலுவலகம் உறுதிப்படுத் தியுள்ளது.

வழக்கின் பின்னணி

2006ஆம் ஆண்டு உலக வங்கியின் நிதியுதவியுடன், ரூ.215 கோடி மதிப்பில் திருவ னந்த புரம்அங்கமாலி மாநில நெடுஞ்சாலை மேம்பாட்டு திட் டம் கேரள மாநில போக்குவ ரத்து திட்டத்தின் கீழ் தொடங்கப் பட்டது. அப்போது பொதுப்பணித்துறை செயலாள ராக இருந்தவர் ஞானேஷ் குமார். இந்த திட்டம் மலேசிய நிறுவன மான PATIBEL கூட்ட மைப்பிடம் ஒப்படைக் கப்பட்டது.

இந்த நிறுவனத்தின் திட்டப் பொறியாளரான லீ சீ பீன், கோலாலம்பூரில் தற்கொலை செய்துகொண்டார். அவர் எழுதி யதாக கூறப்படும் கடிதத்தில், ஞானேஷ்குமார் பில்களை நிறுத்தி வைத்ததாகவும், தன்னை துன்புறுத்திய தாக வும் குற்றம் சாட்டியிருந்தார். இதனைத் தொடர்ந்தும் அப் போதைய வி.எஸ். அச்சுதா னந்தன் தலைமையிலான அரசு ஒரு ஆரம்ப விசாரணையைத் தொடங்கி ஞானேஷ் குமாரை பணியிட மாற்றம் செய்தது.

இதையடுத்து, அவர் மத்திய அரசுப் பணிக்கு சென்றதால், விசாரணை கிடப்பில் போடப் பட்டது. இந்நிலையில், முன் னாள் நிதியமைச்சர் டி.எம். தாமஸ் ஐசக், இந்த கடிதத்தை மீண்டும் பொதுவெளியில் கொண்டு வந்ததைத் தொடர்ந்து, இந்த விவகாரம் தொடர்பான விசாரணை மீண் டும் தொடங்கப்பட்டது.

லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை!

இது குறித்து செய்தியாளர்க ளிடம் பேசிய உள்துறை அமைச்சர் ரமேஷ் சென்னித் தலா, "2006இல் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டபோது ஞானேஷ் குமார் பொதுப்ப ணித் துறை செயலாளராக இருந்தார். மலேசிய திட்டப் பொறியாளர் லீ சீ பீன், கோலா லம்பூரில் தற்கொலை செய்து கொள்வதற்கு முன்பு அவரது மனைவிக்கும், நிறுவன இயக் குநருக்கும் எழுதிய தற்கொ லைக் கடிதங்களில் ஞானேஷ் குமாரின் பெயரை வெளிப்படை யாகக் குறிப்பிட் டுள்ளார்.

அப்போது விசாரணை தொடங்கப்பட்டாலும், அவர் மாற்றப்பட்ட பிறகு கிடப்பில் போடப்பட்டது. சமீபத்திய புகா ரின் அடிப்படையில் விரிவான லஞ்ச ஒழிப்புத்துறை விசா ரணை அவசியம் என்று கண் டறியப்பட்டது.

இது குறித்து கேரள முதல மைச்சர் வி.டி.சதீசன் விவாதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, லஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநர் மனோஜ் ஆபிரகாமை முழுமையான விசாரணை நடத்தி சட்டப்படி நடவடிக்கை எடுக்க உத்தரவி டப்பட்டுள்ளது" என்று தெரிவித் தார்.

செம்மொழித் தமிழுக்குத் தனி நிறுவனம் உருவாக்கிய கலைஞரின் பெருமையும் –

பிறமொழிகளுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்யும் சிறுமையும்!

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, அக். 6 –

தி.மு.க. அங்கம் வகித்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் காலத்தில், தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்த வரலாற்றுச் சாதனையை முத்தமிழறிஞர் கலைஞர் மேற்கொண்டார். 2004 அக்டோபர் 12 அன்று தமிழ் செம்மொழியாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, 2008 மே 19 அன்று சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தனித்த தன்னாட்சி நிறுவனமாக செயல்படத் தொடங்கியது. தமிழுக்குக் கிடைத்த செம்மொழி தகுதியைத் தொடர்ந்து தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா உள்ளிட்ட மொழிகளும் செம் மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டன.



ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு மற்ற செம்மொழிகளுக்கும் தனிநிறுவ னம் உருவாக்க திட்டமிட்டது. ஆனால், 2014ல் ஒன்றியத்தில் ஆட்சிக்கு வந்த பா.ஜ.க. தலைமையில் தேசிய முற் போக்கு கூட்டணி அரசு இத்திட்டத்தை கிடப்பில் போட்டு விட்டது.

ஏனைய செம்மொழிகளுக்கான ஆய்வு நடவடிக்கைகள் பெரும்பாலும் ஒன்றிய அரசின் இந்திய மொழிகள் நிறுவனத்தின் (CIIL) கீழ் செயல்படும் உயர்திறன் நிறுவனம் (Centre of Excellence) போன்ற அமைப்பு களின் வழியாக முன்னெடுக்கப்பட்டன.

கன்னடத்துக்கான உயர்திறன் நிறு வனம் கூட 2011ல் இந்திய மொழிகள் நிறுவனத்தில் (CIIL), மைசூரில் நிறு வப்பட்டது.

இந்த நிலையில், 2026 அக்டோபர் 1ஆம் தேதியிட்ட ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் அலுவலக உத்தர வின்படி, அசாமி, வங்காளம், மராத்தி, பாலி, பிராகிருதம் ஆகிய ஐந்து செம் மொழிகளுக்காக உயர்திறன் நிறுவ னம் (Centre of Excellence) அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவை முறையே தேஜ்பூர் பல்க லைக்கழகம், விஸ்வபாரதி, டெக்கான் கல்லூரி, மத்திய ஒடிசா பல்கலைக்க ழகம், மத்திய குஜராத் பல்கலைக்கழ கம் ஆகிய உயர்கல்வி நிறுவனங்களில் செயல்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இதில் குறிப்பிடத்தக்கது என்ன வென்றால், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் போல செம்மொழி தமிழை மட்டுமே மையமாகக் கொண்டு செயல்படும் தனித்த கட்டடம் கொண்ட தன்னாட்சி நிறுவனம் சென்னையில் அமைந்துள்ளது.

மத்திய அரசின் அதிகாரப்பூர்வ தகவலும், தமிழ் ஆய்வுக்கென செம் மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தனித்துவமாக செயல்படுவதை உறுதிப்படுத்துகிறது.

மொழிகளின் வளர்ச்சி என்பது வெறும் அறிவிப்புகளால் மட்டும் சாத்தி யமல்ல. அதற்குத் தேவையானது நீண்டகால ஆய்வு, ஆவணப்படுத்தல், பதிப்பாக்கம், மொழிபெயர்ப்பு, கல்வி மற்றும் தனித்துவமான நிறுவனக் கட டமைப்பு.

தமிழுக்கு இத்தகைய தனித்த நிறு வனக் கட்டமைப்பை உருவாக்கிய வர லாற்றுப் பங்களிப்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் பங்கு மறக்க முடியாதது.

இன்றைய ஒன்றிய அரசின் ஐந்து புதிய உயர்திறன் நிறுவனத்தின் முயற்சி வரவேற்கத்தக்கதாக இருந்தா லும், தமிழுக்காக உருவாக்கப்பட்ட செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவ னத்தின் தனித்துவமான நிறுவன மாதி ரியுடன் இவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியம்.

இதன்மூலம், ஒரு மொழியின் பெருமையைப் பேசுவதற்கும், அதன் வளர்ச்சிக்குத் தேவையான நிரந்தர நிறுவனங்களை உருவாக்குவதற்கும் இடையிலான வேறுபாடு தெளிவாகிறது.

இந்தியை தவிர பிற மொழிகளை வளர்க்கும் உண்மையான அக்கறை பா.ஜ.க. அரசுக்கு இல்லை என்பதும் இதன் மூலம் தெளிவாகின்றது என்று எம்.எச்.ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.